செ.வெ.எண். 50/மார்ச்  தேதி : 22.03.2017

**தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், சிக்கமாரண்டஅள்ளியில் ஏழை எளிய மக்களின் வறுமையை ஒழிக்க மாண்புமிகு அம்மா அரசு கொண்டு வந்த புது வாழ்வு திட்டத்தின் மூலம் ஆயத்த ஆடை தயாரிப்பு நிறுவனத்தை மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் கே.பி.அன்பழகன் அவர்கள் தொடங்கி வைத்தார்.**




தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், சிக்கமாரண்டஅள்ளி ஊராட்சியில் மகளிர் தொழில் முனைவோருக்கான ஆயத்த ஆடை தயாரிப்பு நிறுவனத்தை மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாண்புமிகு உயர் கல்வி துறை அமைச்சர் திரு.கே பி.அன்பழகன் அவர்கள் தொடங்கி வைத்து பேசியதாவது :-

மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கொண்டு வந்த புது வாழ்வு திட்டம் மக்களின் தேவைகளை மக்களே கண்டறிந்து திட்டமிட்டு, கண்காணித்து, திட்ட நிதியினை மக்களே செலவழித்து மக்களின் முன்னேற்றத்திற்காக வறுமையை போக்கி வளமான சமூதாயத்தை உருவாக்கும் வகையில் 2011-ம் ஆண்டு முதல் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் மூலம் ஏழை எளிய மக்கள் அதிக வருமானம் பெற்று தங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொள்ளும் வகையில் அனைத்து உதவிகளும் புது வாழ்வு திட்டத்தின் மூலம் மக்களுக்கு சென்றடைய வேண்டும் என்பதே மாண்புமிகு அம்மா அவர்களின் அரசின் இலட்சியமாகும்.

நமது மாவட்டத்தில் ஏழை எளிய மக்களின் வறுமை ஒழிப்பிற்காக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு புது வாழ்வு திட்டம் ஜூன் 2011-ம் ஆண்டு முதல் நல்லம்பள்ளி, பென்னாகரம், பாலக்கோடு, மொரப்பூர், அரூர் மற்றும் பாப்பிரெட்டிப்பட்டி ஆகிய 6 ஒன்றியங்களுக்குட்பட்ட 193 கிராம ஊராட்சிகளில் 222 கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பாலக்கோடு ஒன்றியம், சிக்கமாரண்டஅள்ளி ஊராட்சியில் மகளிர் தொழில் முனைவோருக்கான ஆயத்த ஆடை தயாரிப்பு நிறுவனத்தை தொடங்க சமூக பொருளாதார மேம்பாட்டு திட்டத்தின் கீழ் புதுவாழ்வு திட்டத்திற்கு ரூ. 9.00 இலட்சம் மதிப்பில் 36 தையல் இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிறுவனத்தின் மூலம் அனைத்து உறுப்பினர்களுக்கும் நிரந்தர வேலை மற்றும் போதிய ஊதியம் கிடைத்து வருகிறது. இதன் மூலம் படித்த வேலைவாய்ப்பற்ற மகளிர் தங்களது வாழ்வாதாரம் பெருகி அவர்களும் அவர்களுடைய குடும்பமும் பொருளாதார ரீதியாக உயர்ந்த நிலையை அடையவும், மேலும் மகளிர் வாழ்வில் தன்னம்பிக்கையோடு பணியாற்றவும் மாண்புமிகு அம்மா அரசு அவர்களுக்கு வழிகாட்டியாக உள்ளது என மாண்புமிகு உயர் கல்வி துறை அமைச்சர் திரு.கே பி.அன்பழகன் அவர்கள் தெரிவித்தார்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.